**செய்தி வெளியீடு எண்:266** **நாள் : 06.06.2014**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இன்று (6.6.2014) சென்னை ஆளுநர் மாளிகையில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்களை சந்தித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்களை அவ்வப்போது மரியாதை நிமித்தம் சந்தித்து தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்தும், அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் எடுத்துரைப்பது வழக்கம். அந்த அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று சென்னை ஆளுநர் மாளிகையில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்களை சந்தித்து, சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்தும், அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்கள்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 6.6.2014.